# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரக்கூட்ட அழைப்பிதழ்
## கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற அவசரக்கூட்டம் வருகின்ற 29.11.2024 **வெள்ளிக்கிழமை** மாலை 4.00 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி பழைய அலுவலகத்தில் உள்ள படேல் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்**
நாள் : 28.11.2024

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு** : பொருள்களில் நிரல்
**பெறுநர்** : **அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல்** :
1. **பாராளுமன்ற உறுப்பினர்**, மயிலாடுதுறை
2. **மாநிலங்களவை உறுப்பினர்**
3. **சட்டமன்ற உறுப்பினர்**, கும்பகோணம்
4. **அனைத்து நாளிதழ்கள்**

| மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 29.11.2024ம் | நவம்பர் மாதம் அவசரக் கூட்ட தீர்மானம்<br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|

**பொருள் எண்.1**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2021–22 நிதியின் கீழ் கும்பகோணம் நகராட்சி சிப்பம்–12 ,வார்டு 38, 22வது தெரு,திருஞானசம்பந்தர் தெரு. மும்மூர்த்தி விநாயகர் சன்னதி தெரு, குமரன் தெரு மற்றும் சத்தியம் நகர் ஆகிய பழுதடைந்த தார் சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு 03.12.2021 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் திரு.என். சரவணன் அவர்கள் மதிப்பீட்டைவிட 4.95 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தீர்மான எண் 1332, நாள் 25.01.2022 அன்று மன்றப் பொருள் அனுமதியளிக்கப்பட்டது. பணி மேற்கொண்டதன் செலவினம் விபரம் கீழ்கண்டவாறு,

| ஒப்பந்ததாரர் | மன்றத்தால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி மேற்கொண்ட செலவினம் (ரூ.இலட்சத்தில்) | Turip 2021–22 திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மானியத்தொகை (ரூ.இலட்சத்தில்) | மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொண்ட செலவினம் |
|---|---|---|---|
| என். சரவணன் | 119.90 | 114.90 | ரூ.500817/– |

<u>**அலுவலக குறிப்பு**</u> மானியத்தொகைய விட கூடுதலாக செலவினம் ரூ.500817/– மாநகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 6291-12/2021/E2(sch)**

**தீர்மான எண்:** 231 **அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 ன் கீழ், சிப்பம் –11 ல் வார்டு எண் 35,36,39,40,41 மற்றும் 44ல் சௌராஷ்டிரா புதுத் தெரு, சௌராஷ்டிரா பெரியத் தெரு,ஐயங்கார் தெரு,சீதாரெட்டி தெரு, காசி விஸ்வநாதர் கிழக்கு மற்றும் குறுக்கு தெரு, (காசிராமன் தெரு), ஜெ.பி.கிழக்கு தெரு மற்றும் குறுக்கு சாலை(அழகப்பன் தெரு), ராமகிருஷ்ணா நகர் 1 மற்றும் 2 ,முத்துகிருஷ்ணா நகர் மற்றும் குறுக்கு சாலை ஆகியவற்றிற்கு தார் தளம் அமைக்கும் பணிக்கு 11.02.2021 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் திரு.என். சரவணன் அவர்கள் மதிப்பீட்டைவிட 4.94 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தீர்மான எண் 951, நாள் 25.02.2021 ல் மன்றப் பொருள் அனுமதியளிக்கப்பட்டது. பணி மேற்கொண்டதன் செலவினம் விபரம் கீழ்கண்டவாறு,

| ஒப்பந்ததாரர் | மன்றத்தால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி மேற்கொண்ட செலவினம் (ரூ.இலட்சத்தில்) | SRP 2020–21 திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மானியத்தொகை (ரூ.இலட்சத்தில்) | மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொண்ட செலவினம் |
|---|---|---|---|

**தீர்மான எண்:** 232 **அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| என். சரவணன் | 206.93 | 200.00 | ரூ.693773/- |

<u>**அலுவலக குறிப்பு**</u>

மானியத்தொகைய விட கூடுதலாக செலவினம் ரூ.693773/- மாநகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 7907/2020/Package-11/E2**

---

**பொருள் எண்.3**

கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21 ன் கீழ், சிப்பம் -12 ல் வார்டு எண்42,44 மற்றும் 45ல் உள்ள எல்.பி.எஸ். சாலை, நாச்சியார் கோவில்வழிநடப்பு,சீனிவாசன் நகர், இளங்கா நகர் மற்றும் குறுக்கு சாலை (நாதன் நகர்) ஆகியவற்றிற்கு தார் தளம் அமைக்கும் பணிக்கு 11.02.2021 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் திரு.எம்.இராஜேந்திரன் அவர்கள் மதிப்பீட்டைவிட 4.96 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தீர்மான எண் 952, நாள் 25.02.2021,ல் மன்றப் பொருள் அனுமதியளிக்கப்பட்டது. பணி மேற்கொண்டதன் செலவினம் விபரம் கீழ்கண்டவாறு,

| ஒப்பந்ததாரர் | மன்றத்தால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி மேற்கொண்ட செலவினம் (ரூ.இலட்சத்தில்) | SRP 2020-21 திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மானியத்தொகை (ரூ.இலட்சத்தில்) | மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொண்ட செலவினம் |
|---|---|---|---|
| எம்.இராஜேந்திரன் | 202.32 | 200.00 | ரூ.232200/- |

<u>**அலுவலக குறிப்பு**</u>

மானியத்தொகைய விட கூடுதலாக செலவினம் ரூ.232200/- மாநகராட்சி பொது நிதியின் கீழ் பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 7907/2020/Package-12/E2**

233 **அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**.

---

**பொருள் எண்.4**

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான பிடாரி குளம் அருகில் உள்ள பழையமீன் அங்காடி வணிக வளாகம், சர்வே எண்.804/2,805,806 ஆகிய இடத்தில் வணிக வளாக கட்டிடங்கள் ரூ.10.70 கோடியில் கட்டப்பட்டு வரப்படுகிறது. அவ்வணிக வளாகத்தினை குத்தகை மூலம் ஒப்படைப்பதற்கு முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction/Pre Tender)மூலம் முன் வைப்புத்தொகை பெற்று கட்டிடம் கட்டி முடித்தபின் ஒதுக்கீடு செய்திட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது.

234 **அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

| வ.எண் | பகுதி | சர்வே எண் | கட்டிட விபரம் | தளம் வாரியாக அளவு | குத்தகை இனத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்புத்தொகை ரூ.இலட்சத்தில் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பிடாரி குளம் அருகில் உள்ள பழைய மீன் அங்காடி வணிக வளாகம் | 804/2,805,806 | தரைத்தளம்<br>முதல் தளம்<br>இரண்டாம் தளம்'<br>மூன்றாம் தளம்<br>கூடுதல்<br>இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடும்<br>நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் | 10114 ச.அடி<br>10114 ச.அடி<br>10114 ச.அடி<br>10114 ச.அடி<br>**40456** ச.அடி<br>2959 ச.அடி<br>1259 ச.அடி | வணிக வளாகம் முழுவதும் கோருபவர்களுக்கு வைப்புத் தொகை ரூ.545 இலட்சம் தளம் வாரியாக கோருபவர்களுக்குஉரிய வைப்புத் தொகைதரைதளம்–200 இலட்சம். முதல் தளம்–180 இரண்டாம் தளம் –150 இலட்சம் மூன்றாம் தளம்–115 இலட்சம் | ரூ.100 இலட்சம்<br>ரூ.100 இலட்சம்<br>ரூ.90 இலட்சம்<br>ரூ.75 இலட்சம்<br>ரூ.50 இலட்சம் |

முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்களின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | தேதி | பெயர் மற்றும் முகவரி | முன் ஒப்பந்தப்புள்ளி தொகை | முன் ஏலத்தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 16.10.2024 | திரு.க.சரவண குமார் திப்பிராஜபுரம் | ரூ.93,33,324/– ஓர் ஆண்டிற்கு ரூ.777777/– (மாதஉரிம தொகை) | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | மறு முன்ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 2. | 06.11.2024 | 1)திரு.க.சரவண குமார் திப்பிராஜபுரம். 2) திரு.பி.ரமேஷ், கும்பகோணம் | ரூ.10,80,000/– (மாத உரிமதொகை) ரூ.10,53,000/– (மாத உரிமதொ | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | மறு முன்ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கை) | | |
| 3. | 13.11.2024 | 1)திரு.க.சரவண குமார் திப்பிராஜபுரம். 2) திரு.பி.ரமேஷ், கும்பகோணம் | ரூ.11,25,000/– (மாத உரிமதொகை) ரூ.13,59,000/– (மாத உரிமதொகை) | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | மறு முன்ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 4. | 20.11.2024 | 1)திரு.க.சரவண குமார் திப்பிராஜபுரம். 2) திரு.பி.ரமேஷ், கும்பகோணம் | ரூ.14,54,000/– (மாத உரிமகை) ரூ.4,10,000/– (மாத உரிமதொகை) | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | மறு முன்ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 5. | 27.11.2024 | 1)திரு.க.சரவண குமார் திப்பிராஜபுரம். 2) திரு.பி.ரமேஷ், கும்பகோணம் | ரூ.14,54,004/– (மாத உரிமதொகை) ரூ.4,15,000/– (மாத உரிமதொகை) | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | – |

16.10.2024 அன்று முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. வணிக வளாகம் முழுவதும் குத்தகைக்கு கோரி திரு.க,சரவணகுமார்,திப்பி ராஜபுரம் என்பவர் ரூ.93,33,324/–(ஒர் ஆண்டிற்கு) என குறிப்பட்டு ஒருவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தார். ஏலத்தொகை மிகவும் குறைவாக இருந்ததால் மீண்டும் 6.11.2024 அன்று இரண்டாவது முறையாக முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை.

ஒப்பந்தப்புள்ளியில் வணிக வளாகம் முழுவதுமாக கோரி இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் திரு.பி.ரமேஷ்,கும்பகோணம் என்பவர் ரூ.10,53,000/– மாத வாடகை என்றும் திரு.க.சரவணகுமார் திப்பிராஜபுரம்,என்பவர் ரூ.10,80,000/–மாத வாடகை என்று குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

மேலும் மாத வாடகை தொகை குறைவாக இருந்தால்13.11.2024 அன்று மறு முன் ஏலம்/மறு முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வணிகவளாகம் முழுவதுமாக கோரி இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் திரு.க.சரவணகுமார்,திப்பிராஜபுரம் என்பவர் ரூ.11,25,000/– மாத வாடகை என்றும்,திரு.பி.ரமேஷ்,கும்பகோணம் என்பவர் ரூ.13,59,000/– மாத வாடகை என்றும் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

நான்காவது முறையாக 20.11.2024 அன்று மறு முன் ஏலம்/மறு முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வணிக வளாகம் முழுவதுமாக கோரி இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் திரு.க.சரவணகுமார், திப்பிராஜபுரம் என்பவர் ரூ.14,54,000/– மாத வாடகை என்றும், திரு.பி.ரமேஷ், கும்பகோணம் என்பவர் ரூ.4,10,000/–மாத வாடகை என்றும் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| | மேலும் மாத வாடகை தொகை குறைவாக இருந்ததால் 5வது முறையாக 27.11.2024 அன்று மறு முன்ஏலம்/மறு முன்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வணிக வளாகம் முழுவதுமாக கோரி இரண்டு நபர்கள் கலந்துகொண்டதில் திரு.க.சரவணகுமார், திப்பிராஜபுரம் என்பவர் உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.14,54,004/– மாத வாடகை என்று ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேற்கண்டவாறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக மாத வாடகை ரூ.14,54,004/–என்று குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது ஒரு வருடத்திற்கு ரூ.17,448,048/– ஆகும். மாத வாடகையுடன் GST 18% தொகையான ரூ.2,61,721/–ஐ சேர்த்து செலுத்தும்பட்சத்தில் மாதவாடகை ரூ.17,15,725/–ஆகும். மேற்கண்ட உயர்ந்தப்பட்ச ஒப்ந்தப்புள்ளி தொகையினை ஏற்பது குறித்தும் மீதமுள்ள வைப்புத்தொகையினை செலுத்துவதற்கும் கூடுதல் நிபந்தனைகள் விதித்து ஆணையர் கும்பகோணம் மாநகராட்சி அவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்ள அதிகாரம் அளித்தும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1) திரு.க சரவணக்குமார்,திப்பிராபுரம், என்பவரின் உயர்த்தபட்ச ஒப்பந்தப்புள்ளி<br>மாத வாடகைரூ.14,54,004/– ஐ ஏற்கலாம்<br>2) வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டு உரிய வைப்புத் தொகை மற்றும் 12 மாத<br>வாடகை வைப்புத்தொக பெற்று குத்தகை தாரரிடம் ஒப்படைக்க ஆணையர்<br>கும்பகோணம் மாநகராட்சி அவர்களுக்கு அதிகாரம் வழங்கலாம்.<br>3) மேற்கண்ட வணிக வளாகத்திற்கு முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள் கோரி தினசரி<br>நாளிதழ் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றிற்கான செலவினத் தொகையையும் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.7904/2024/அ7** | |
| | **பொருள் எண்.5**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்.1–இல் பட்டியலில் உள்ள 49 காலிமனை வரிவிதிப்புகளுக்குரிய புதைசாக்கடை கட்டண கேட்பு தொகை ரூ.540225/–ஐ தள்ளுபடி செய்யவும், அதற்குரிய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **அனுமதிக்கலாம்**.<br>**ந.க.எண்**.10963/2024/**அ**4 | 235<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| | **பொருள் எண்.6**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்.2–இல் பட்டியலில் உள்ள 111 காலிமனை வரிவிதிப்புகளுக்குரிய புதைசாக்கடை கட்டண கேட்பு தொகை ரூ.1421925/–ஐ தள்ளுபடி செய்யவும், அதற்குரிய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** **அனுமதிக்கலாம்**.<br>**ந.க.எண்**.11072/2024/**இ**3/**ம**2 | 236<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| | **பொருள் எண்.7**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்.3–இல் பட்டியலில் உள்ள 24 காலிமனை வரிவிதிப்புகளுக்குரிய புதைசாக்கடை கட்டண கேட்பு தொகை ரூ.255675/–ஐ தள்ளுபடி செய்யவும், அதற்குரிய வரிவிதிப்பு | |

<table>
<tr>
<td></td>
<td>எண்களை நீக்கம் செய்யவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.11014/2024/இ4/ம3</td>
<td>237<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண்.8<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்.4–இல் பட்டியலில் உள்ள 61 காலிமனை வரிவிதிப்புகளுக்குரிய புதைசாக்கடை கட்டண கேட்பு தொகை ரூ.683775/–ஐ தள்ளுபடி செய்யவும், அதற்குரிய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2509/2017/இ4</td>
<td>238<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண்.9<br>கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 நாகேஸ்வரன் திருமஞ்சனவீதியில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்திற்கு கும்பகோணத்தை சேர்ந்த முதல் மொழிப்போர் தியாகி திரு.ஈ.கி.தாளமுத்து அவர்களின் பெயரை சூட்டுவதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.க.அன்பழகன் மற்றும் தமிழ் தேசிய பேரியக்கம் சார்பிலும் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களுக்கு பெயர் வைத்தல் மற்றும் பெயர் மாற்றம் செய்தல் போன்றவைகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தங்கள்–2022) பிரிவு 129(1)ன்படி அரசின் அனுமதி பெற்ற பின்னரே மன்றத்தின் அனுமதி பெற்று முடிவு செய்யவேண்டும் என உள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மேற்படி சட்ட பிரிவிற்கு இணங்க அரசிற்கு பெயர் வைத்தல் தொடர்பாக கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.9454/2024/டி1/ம.2</td>
<td>239<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண்.10<br>கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான யாத்ரிநிவாஸ் தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதி நடத்திக்கொள்ளும் உரிமம் ஒப்படைக்கும் தேதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு முறையே 07/11/2024, 14/11/2024 மற்றும் 21/11/2024 ஆகிய தேதிகளில் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கலந்து கொண்டவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>தேதி</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலத்தொகை</th><th>குறிப்பு</th></tr>
<tr><td rowspan="2">07/11/2024</td><td>D.செந்தில்குமார36.T.G.S.நகர். குமரன் தெரு, கும்பகோணம்</td><td>ரூ.16,00,000/–<br>(வருடத்திற்கு)</td><td rowspan="2">எவரும் கலந்துகொள்ள வில்லை</td><td rowspan="2">மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோர முடவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>K.சாந்தகுமார் 3/50 மெயின் ரோடு, திருவைக்காவூர்.பாபநாசம் தாலுகா.</td><td>ரூ.14,90,000/–<br>(வருடத்திற்கு)</td></tr>
<tr><td rowspan="2">14/11/2024</td><td>D.செந்தில்குமார். 36.T.G.S.நகர். குமரன் தெரு, கும்பகோணம்</td><td>ரூ.16,10,001/–<br>(வருடத்திற்கு)</td><td rowspan="2">எவரும் கலந்துகொள்ள வில்லை</td><td rowspan="2">மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோர முடவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>K.சாந்தகுமார்</td><td>ரூ.14,90,000/–</td></tr>
</table>
</td>
<td>240 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | 3/50 மெயின் ரோடு, திருவைக்காவூர்,பாபநாசம் தாலுகா. | (வருடத்திற்கு) | | |
| 21/11/2024 | D.செந்தில்குமார். 36.T.G.S.நகர். குமரன் தெரு, கும்பகோணம் | ரூ.17,00,100/- (வருடத்திற்கு) | எவரும் கலந்துகொள்ள வில்லை | - |
| | K.சாந்தகுமார் 3/50 மெயின் ரோடு, திருவைக்காவூர்,பாபநாசம் தாலுகா. | ரூ.14,90,000/- (வருடத்திற்கு) | | |

21/11/2024 அன்று மூன்றாவது முறையாக மேற்கண்டவாறு ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.13,61,588/- விடவும் மேற்கண்டவாறு கூடுதலாக உள்ளது. மேற்கண்டவாறு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளி சென்ற ஆண்டு மூன்றாண்டு சராசரி ஒப்பந்தபள்ளி தொகை ரூ.12,97,779/-ஐ விடவும் சென்ற ஆண்டு தொகையாக வருடத்திற்கு ரூ.13,61,588/- ஆகும். குத்தகை கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகள் அனைத்திற்கும் உட்பட்டு குத்தகையினை ஒப்படைக்க மாமன்றத்தில் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

திரு.D.செந்தில்குமார் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி வருட உரிமத்தொகை ரூ. 17,00,100/-ஐ ஏற்று குத்தகையினை ஒப்படைக்கலாம்.

**ந.க.எண்.10458/2024/அ7**

**மேயர்**

**கும்பகோணம் மாமன்றம்**